**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம்– 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் தேதி திங்கட் கிழமை மாலை 4.00 தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20100/2021/தேர்தல் நாள்.05.10.2021ல் தமிழ்நாடு மாநில மறுவரையறை ஆணையம் அறிவுறுத்தலின்படி அரசு வழிகாட்டுதல் அடிப்படையில் வார்டு மறுவரையறை பணிகளை மேற்கொள்ள 5 உத்தேச தொகுப்புகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்திரவின்படி உரிய பிரேரணைகள் தயார் செய்யவும், அதற்குரிய வார்டு வரைபடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த வரைபடங்கள் தயார் செய்யவும் அதனைத் தொடர்ந்து நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2021க்கு 82 எண்ணம் வாக்குச்சாவடி வரைபடங்கள், ஒருங்கிணைந்த வரைபடங்கள் மண்டல வரைபடம் (ZONAL MAP), வழித்தட வரைபடம் (Rout Map) மற்றும் வாக்கு எண்ணிக்கை மைய வரைபடங்கள் தயார் செய்து மாவட்ட ஆட்சியர், தென்காசி அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்ய வேண்டியது உள்ளதால், மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்குரிய செலவுத்தொகை ரூ.80000/- (எண்பதாயிரத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1585/2021/அ3)**

**தீர்மான எண். 632**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்- 2021 தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அனைத்து செலவினங்களுக்கும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.40.00/- லட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டு அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை தற்போது பொதுநிதியிலிருந்து செலவிடவும் அதன் பின்னர் அரசிடமிருந்து மானியத்தொகை வரப்பெறும் நிகழ்வில் அதனை ஈடு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1585/2021/அ3)**

**தீர்மான எண். 633**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

கடையநல்லூர் நகராட்சியில் **24.02.2021**ம் தேதி முதல் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.பி.திருப்பதி பாண்டி என்பவர் சிவகாசி மாநகராட்சிக்கு பணி மாறுதல் வழங்க கோரி **06.07.2021**ம் தேதி விண்ணப்பித்துள்ளார். இவர் மீது இந்நகராட்சியில் இவருடைய பணியிடத்தில் நிர்வாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை. எனவே திரு.பி.திருப்பதிபாண்டி, தூய்மை பணியாளர் என்பவருக்கு கடையநல்லூர் நகராட்சியில் இருந்து சிவகாசி மாநகராட்சிக்கு பணியிட மாறுதல் வழங்கிட மன்ற அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2221 /2021/எச்1)**

**தீர்மான எண். 634**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் (பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு, பொதுச் சுகாதாரப்பிரிவு மற்றும் தூய்மை பணியாளர்கள் உட்பட) பணிபுரியும் தகுதி பெற்ற பணியாளர்களுக்கு **2021–22**ம் ஆண்டிற்குரிய சீருடைகள், சீருடைகளுக்கான தையற்கூலி மேலும், நகர சுகாதார செவிலியர்களுக்கு அரசு ஆணை எண்.**306** நாள்.**13.10.2017**ன்படி சீருடைப்படி ரூ.1000x2 set x2

=4000/– ரொக்கமாக வழங்கவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4873/2021/எச்1)**

**தீர்மான எண். 635**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை அவர்களது கடிதம் ந.க.எண்.130/2021/அ2 நாள்.30.07.2021 மற்றும் திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களது கடிதம் ந.க.எண்.158/2016/ஆ–4 நாள்.18.08.2021ன்படி முதல் நிலை நகராட்சியான கடையநல்லூர் நகராட்சிக்கு 2021–2022ம் ஆண்டிற்கு நிர்வாக பங்குத் தொகை ரூ.75000/– இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4149/2021/சி1)**

**தீர்மான எண். 636**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள அம்மா உணவகத்தில் உள்ள மிக்ஸி மற்றும் அடுப்பு பழுது நீக்கம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.2270/ஐ அம்மா உணவகப் பணியாளர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 3719/2021/சி1)**

**தீர்மான எண். 637**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

கடையநல்லூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 18.09.2019ல் அன்று மரணமடைந்த திரு.சொள்ளமாடன், துப்புரவு பணியாளர் எண்.88 என்பவரின் சிறப்பு சேமநல நிதி சந்தா மற்றும் அதற்கான வட்டிதொகையினை தனக்கு வழங்க கேட்டு அன்னாரின் வாரிசுதாரான திருமதி. சொ.ராஜம்மாள், கோரியுள்ளார்.

எனவே திரு.சொள்ளமாடன், துப்புரவு பணியாளர் எண்.88 என்பவரின் உரிய சிறப்பு சேமநலநிதி சந்தாதொகை ரூ.2960/– மற்றும் வட்டித்தொகை ரூ.7075/– ஆகமொத்தம் ரூ.10035/–ஐ அன்னாரின் மனைவி திருமதி.சொ.ராஜம்மாள் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4889 /2021/D1)**

**தீர்மான எண். 638**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பகுதியில் குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கும் பொருட்டு தற்போது, நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணங்கள் மற்றும் வைப்புத்தொகையினை இந்நகர்மன்ற தீர்மான எண்.127, நாள்.24.05.2018ல் திருத்தம் செய்து கீழ்க்கண்டவாறு வசூல் செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

| வ. எண் | விபரம் | ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் குடிநீர் கட்டணம் ஒரு மாதத்திற்கு | புதிதாக உயர்வு செய்யப்படும் குடிநீர் கட்டணம் ஒரு | ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் குடிநீர் வைப்புத் தொகை | புதியதாக உயர்வு செய்யப்படும் குடிநீர் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|

| | | (ரூ) | மாதத்திற்கு (ரூ) | (ரூ) | (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | வீட்டு இணைப்பு (Domestic) | 55.00 | 150.00 | 6000.00 | 7500.00 |
| 2 | வீட்டு உபயோகமில்லா இணைப்பு | 105.00 | 300.00 | 10000.00 | 15000.00 |

(அ) மேற்படி, வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டணங்களை உயர்த்தி வசூல் செய்வதற்கு பொதுமக்களின் ஆட்சேபணை கேட்டு தினசரி நாளேட்டில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு பொதுமக்களிடமிருந்தும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளிடம் இருந்தும் பெருமளவில் ஆட்சேபணைகள் தெரிவித்து விண்ணப்பங்கள் வரப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் குடிநீர் கட்டணத்தை மட்டும் நீக்கம் செய்ய மன்றம் இசைவு வழங்கலாம்.

(ஆ) தற்போது இந்நகராட்சி பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை உயர்வு செய்யப்பட்டதாலும், மேலும், நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு புதிய குடிநீர் இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், அதற்காக எதிர்கொள்ள வேண்டிய கூடுதல் செலவினை தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணம், வைப்புத்தொகையினை கொண்டு மேற்கொள்ள போதுமானதாக இல்லை என்பதால், இதனை ஈடுசெய்வதற்கு கீழ்க்கண்ட விபரப்படி குடிநீர் வைப்புத்தொகை மட்டும் 01.09.2018 முதல் நடைமுறைப்படுத்தி வசூல் செய்யப்பட்டு வருவதற்கு பின்னேற்பு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வரும் குடிநீர் வைப்புத்தொகை (ரூ) | புதியதாக உயர்வு செய்யப்படும் குடிநீர் வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | வீட்டு இணைப்பு (Domestic) | 6000.00 | 7500.00 |
| 2 | வீட்டு உபயோகமில்லா இணைப்பு | 10000.00 | 15000.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

குடிநீர் அத்தியாவசியம் கருத்திற்கொண்டும் மற்றும் பொதுமக்கள் நலன் கருத்திற்கொண்டும் குடிநீர் வைப்புத்தொகையினை மட்டும் **01.09.2018** முதல் திருத்தம் செய்து வசூல் செய்யப்பட்டு வருவதற்கு பின்னேற்பு வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு மன்றம் இசைவு வழங்கலாம்.

**(ந.க.எண். 1463/2005/இ2)**

**தீர்மான எண். 639**

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)S.ரவிச்சந்திரன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.